பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 03 செவ்வாய்க்கிழமை 17.01.2023 கதிர் 323

## அடுத்த பேச்சுக்கு முன் முன்னேற்றம் தேவை

### அரசிடம் சம்பந்தன் இடித்துரைப்பு



அரசுக்கு தமிழ்க் கட்சிகள் விதித்த காலக்கெடு இன்றுடன் நிறைவடையும் நிலையில், முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டதாகத்

2

## ‘மொட்டு’க்கு உரிய பாடம் புகட்ட வேண்டும் மக்கள்



### சந்திரிகா வலியுறுத்து

எதிர்வருகின்ற தேர்தல்கள் எதுவாக இருந்தாலும் அதில் ’மொட்டு’க் கட்சிக்குச் சரியான பாடத்தை மக்கள் புகட்ட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தினார்.

சுயாதீனமாகச் செயற்பட்டு வரும்‘மொட்டு’க்கட்சிஎம்.பிக்களான

2

## கொழும்பு மேயர் வேட்பாளராக முஸ்தபாவை களமிறக்க ஐக்கிய தேசியக் கட்சி யோசனை



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு மேயர் வேட்பாளராக முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபாவைக் களமிறக்கு–வது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்துவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி சிங்கள நாளிதழ் இன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்தே பைசரைக் களமிறக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2

# தேர்தலை ஒத்திவைத்தால் வீதியில் இறங்குவர் மக்கள்

## அரசுக்குச் சஜித், அநுர கூட்டாக எச்சரிக்கை



உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு ஒத்திப் போட்டால் அதற்கு எதிராக பெருமளவு மக்களை வீதியில் இறக்கிப் போராடுவோம் என்று எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

2

## மைத்திரியின் சொத்துக்கள் முடங்குமா?



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைவாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை வழங்கத் தவறினால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஐவரின் சொத்துக்கள் முடக்கப்பட லாம் என்றுசிரேஷ்டசட்டத்தரணிகாமினி பெரேரா தெரிவித்தார்.

2

## வடக்கில் இந்த முறை சுயேச்சைகள் குறைவு

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அதிகளவான சுயேச்சைக் குழுக்கள் வடக்கு மாகாணத்தில்போட்டியிட்டிருந்த நிலையில் இம்முறை குறைந்தளவான சுயேச்சைக் குழுக்களே நேற்று வரையில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் 24 அரசியல் கட்சிகளும் 11 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 5 அரசியல் கட்சிகளும் 7 சுயேச்சைக்குழுக்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 அரசியல் கட்சிகளும், வவுனியா மாவட்டத்தில் 6 அரசியல் கட்சிகளும், மன்னார் மாவட்டத்தில் 4 அரசியல் கட்சிகளும் 3 சுயேச்சைக்குழுக்களும்

2

## சிறை சென்று வந்த இளைஞர் அதிகாலை சுட்டுப் படுகொலை

### பேலியகொடையில் பயங்கரம்



பேலியகொடை, கலுபாலம பகுதியில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலை 6.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர்

2

## முஜிபுருக்குப் பதிலாக ஹக்கீம்



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர்முஜிபுர் ரஹ்மான் நாடாளுமன்ற நிதிக் குழுவில் இருந்து விலகியுள்ளார்.

இதன்படி, அவரால் வெற்றிடமான பதவிக்கு ரவூப் ஹக்கீம் எம்.பி. நியமிக்கப்பட்டுள்ளார் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்தார்.

## தனித்து வசித்து வந்த முதியவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள கிணற்றுக்குள் இருந்து 62 வயது ஆணின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மயில்வாகனம் கஜேந்திரன் (வயது – 62) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தனித்து வசித்து வந்த அவரை, கடந்த சனிக்கிழமை இரவு வரை சாவகச்சேரி நகரப் பகுதியில் நடமாடியதை பலர் கண்டுள்ளனர். அதன் பின்னர் எவரும் காணவில்லை.

குளிக்கச் சென்ற வேளையில் தவறி

2

## அவசரகாலச் சட்டம் மூலம் தேர்தலை ஒத்திவைக்கத் திட்டம் போட்ட அரசு!




உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு எவ்வாறான துரும்பைப் பயன்படுத்துவது என்று அரசு யோசித்து வருகின்றது. சிலர் பல ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். அவற்றில் ஒன்றாக அவசரகாலச் சட்டத்தை அறிவித்து தேர்தலை ஒத்திப் போடுவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், அரசிலுள்ள சிலர் அதைக் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

காலிமுகத்திடல் போராட்டத்தை அடக்குவதற்கு அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்ட போது அதற்கு எதிராக சர்வதேச மட்டத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தேர்தலை ஒத்திப்போட்டால்

2

## மொட்டுக்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுரபிரியதர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி ஆகிய இருவரும் அண்மையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரை அவரது வீட்டில் சந்தித்துப் பேசினர். இதன்போதே அவர் இதனைக் கூறினார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்திரிகா கடுமையாக விமர்சித்தார் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடக்கில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் கட்டுப்பணம் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவசரகாலச்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் சர்வேதச எதிர்ப்பைச் சந்திக்க வேண்டி வரும், அமரிக்கா – ஐரோப்பிய ஒன்றியத்தைப் பகைக்க வேண்டி வரும் ஜி.எஸ்.பி. பிளஸை இழக்க நேரிடும் என்று அரசிலுள்ள சிலரால் எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இறுதியில் தற்போதைய பொருளாதார நிலையில் அதைச் செய்வது சரியில்லை என்று கூறி அந்த யோசனையை அரசு கைவிட்டுள்ளது.

## மைத்திரியின்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈஸ்டர் தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு ஒன்றை வழங்கியது. அந்தத் தீர்ப்பின்படி, மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஐவர் 31 கோடி ரூபாவை பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடாக வழங்க வேண்டும். இதனை வழங்கத் தவறினால் இந்த ஐவரின் சொத்துக்கள், சம்பளம், ஓய்வூதியம் போன்றவை முடக்கப்படலாம் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, இந்தத் தண்டனைக்கு மேலதிகமாக சிறைத்தண்டனையும் வழங்க முடியும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி யூ.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

## கொழும்பு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவரான பைசர் முஸ்தபா, அக்கட்சியில் அனைத்துப் பதவிகளில் இருந்து விலகியுள்ளார். இது தொடர்பான இராஜிநாமாக் கடிதத்தைக் கட்சி தலைவருக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அதேவேளை, கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராக முஜிபூர் ரஹ்மானைக் களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

## தனித்து.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

நேற்று கிணற்றடிக்குச் சென்ற அயல்வீட்டுக்கார யுவதி ஒருவர், கிணற்றில் மூழ்கிய நிலையில் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்து சத்தமிடவே அயலவர்கள் பார்வையிட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தினர்.

## சிறை சென்று.......

முதலாம் பக்கத் தொடர்ச்சி

என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த 33 வயதுடைய நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த இளைஞர் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் சிறையிலிருந்து பிணையில் வீடு திரும்பியவர் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

## அடுத்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவில்லை என்றும், அடுத்த கட்டப் பேச்சுக்கு முன்னர் முன்னேற்றம் கட்டாயம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

கடந்த 10 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இறுதியாக நடைபெற்ற பேச்சின் போது நில விடுவிப்பு, அதிகாரப் பகிர்வு, அரசியல் கைதிகள் விடுதலை உள்ளிட்ட உடனடி விடயங்களை நடைமுறைப்படுத்த அரசுக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கியிருந்தோம். அந்த விடயங்களில் இன்னமும் முன்னேற்றம் ஏற்பட்டது எனத் தெரியவில்லை.

எனினும், பொங்கல் தினமன்று (நேற்றுமுன்தினம்) யாழ்ப்பாணத்தில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பின் போது நில விடுவிப்பு தொடர்பில் சில உத்தரவாதங்களை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவாதங்களைப் படையினர் செயற்படுத்துவார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஜனாதிபதியிடமிருந்து அடுத்த கட்டப் பேச்சுக்கான அழைப்பு இன்னமும் எமக்கு வரவில்லை. அழைப்பு வந்தால்தான் அந்தப் பேச்சில் நாம் பங்குபற்றுவதா? இல்லையா? என்பது தொடர்பில் முடிவு எடுப்போம். அடுத்த கட்டப் பேச்சுக்கு முன் ஜனாதிபதியிடம் நாம் ஏற்கனவே முன்வைத்த கோரிக்கைகளில் கட்டாயம் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும்–என்றார்.

## தேர்தலை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தெரிவித்ததாவது:–

நாட்டை மேலும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளுவதற்கே அரசு முயக்கின்றது. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்த அரசு எந்த நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை.

மின் கட்டணத்தை மேலும் அதிகரிப்பதில் அரசு உறுதியாக இருக்கின்றது. இதனால் பல தொழில்சாலைகள் மூடப்படும். பொருளாதாரம் மேலும் பின்னடைவைச் சந்திக்கும்.

இந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அரசு நிச்சயம் படுதோல்வியைச் சந்திக்கும்.

நிலையான அரசு இருந்தால் மாத்திரமே இந்தப் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று சர்வதேச நாடுகள் கூறுகின்றன.

அந்த நிலையான ஆட்சி அமைவதற்கு தேர்தல் அவசியம். ஆனால், தேர்தலில் தோல்வியடைந்து விடுவோம் எனப் பயந்து அரசு தேர்தலை ஒத்திப்போட முயற்சி செய்கின்றது.

அதற்குப் பயந்து அரசு தேர்தலை ஒத்திப்போட்டால் இலட்சக்கணக்கில் மக்களை வீதிக்கு இறக்கிப் போராடுவோம் – என்றனர்.

076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தலைமைக்குத் தேவை திராணி

கடந்த 35 வருடங்களாக நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பில் இருக்கின்ற ஏற்பாடுகளை பேரினவாத சிந்தனை ஒன்றின் அடிப்படையில் மட்டுமே நடைமுறைப்படுத்த மறுக்கும் இலங்கை ஆட்சி பீடம், அந்தச் சட்டத்தின் மூலம் தமிழர்களுக்கு நீதி செய்யும் என்று நம்புவது நடக்கின்ற காரியம் அல்ல.

13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என இப்போதுதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவிக்கின்றார். ஆனால், அதை இதுவரை நடைமுறைப்படுத்தாமல் இருந்தமை – நடைமுறைப்படுத்த மறுத்தமை – நாட்டின் அரசமைப்பை மீறும் செயலாகும் என்று கொழும்பு பல்கலைக்கழக சட்டப் பீடப் பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் சுட்டிக் காட்டுகின்றார்.

நாட்டின் அரசமைப்பில் இருக்கும் சட்ட ஏற்பாடுகளை மூன்றரை தசாப்த காலம் நடைமுறைப்படுத்தாமல் அடம்பிடித்தமை மட்டுமல்ல, அதை இப்போது செய்ய முற்படுவது ஏதோ தமிழினத்திற்கும் சிறுபான்மையினருக்கும் தான் செய்ய விழையும் சகாயம் என்பது போல காட்ட முயற்சிக்கின்றார் ஜனாதிபதி உட்பட்ட ஆட்சித் தரப்பினர்.

அதை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்த பின்பும், அதைச் செய்வதற்கு ஒரிரண்டு வருடங்கள் பிடிக்கும் என்றும் கூட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்தில் கோடி காட்டி இருக்கின்றார்.

அரசமைப்பில் இருக்கின்ற – கருப்பு, வெள்ளையில் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள – அதிகாரப் பரவல் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் கடப்பாடு இருந்தும், அதனைச் செய்ய மறுத்து, அரசமைப்பு சட்ட மீறலாகப் பெரும் அகங்காரத்துடன் நடந்து கொள்ளும் தென்னிலங்கை ஆட்சி பீடங்கள், சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுத் திட்டத்திற்கு இணங்கி வருவார்கள் என்று நம்புவது முட்டாள்தனமாகும்.

அரசமைப்பில் இருக்கின்ற ஏற்பாடுகளையே நடைமுறைப்படுத்த மறுக்கும் பேரினவாத மேலாண்மை திமிர்த்தனம், அதிகாரப்பர்வு செய்யப்பட்ட விடயங்களை மீளப் பெற முடியாது என்ற சமஷ்டிக் கோட்பாட்டிலான தீர்வுக்கு இணங்குவார்கள் என நாம் தமிழர்கள் கனவு காண்பதும் முட்டாள்தனம்தான்.

அரசமைப்புச் சட்டத்தில் இருப்பவற்றை நடைமுறைப்படுத்த ஒரிரண்டு வருடங்கள் கோரும் ஆட்சி தலைமையினால் இனி இணக்கம் காணக்கூடிய தீர்வைக் கூட நடைமுறைப்படுத்த முடியுமா, அதற்கு எத்தனை தசாப்தங்கள் தேவை என்ற கேள்விகள் எல்லாம் உள்ளன.

தீர்க்கமாக முடிவெடுத்து, திடமான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய திராணி மிக்க அரசியல் தலைமைத்துவம் நாட்டுக்கு கிட்டாதவரை நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய நியாயத் தீர்வு ஒன்றை எட்டுவது சாத்தியமல்ல.

# வங்குரோத்து நிலைமையில் உள்ள நாட்டை காப்பாற்றுவதே தற்போது முதன்மையானது!

### சமன் ரத்னப்பிரிய கூறுகிறார்



வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டைக் காப்பாற்றுவதே முதன்மையானதாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த தருணத்தில் தேர்தலை நடத்துமாறு கோரி குரல் எழுப்புவது பரிதாபகரமான உணர்வு என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வங்குரோத்து அடைந்துள்ள நாட்டில் தேர்தலுக்குச் செலவு செய்வதே பிரச்சினை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# திருகோணமலை மாவட்ட விவசாயிகள் அரசாங்க அதிபரைச் சந்தித்து பேச்சு!

திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை திருகோணமலை மாவட்ட அரச அதிபரை சந்தித்து தனிப்பட்ட முறையிலான பேச்சு ஒன்றில் ஈடுபட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டதாக சந்திப்பின் பின்னராக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த விவசாயிகள் தெரிவித்தனர்.

விசேடமாக தற்போதைய காலகட்டத்தில் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள மஞ்சள் தாக்கம் தொடர்பாகவும் அதற்கான நடவடிக்கைகள் பற்றியும் இதன் போது ஆராயப்பட்டதுடன், நெல் விலை எதிர்பாராத விதமாக வீழ்ச்சி அடைந்திருப்பதையும் சுட்டிக்காட்டி இதன் காரணமாக விவசாய சமூகத்தினர் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதுடன் போதிய எரிபொருள் கிடைக்கப்பெறாமை காரணமாகவும் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்க அதிபருக்கும் விவசாயத்திணைகள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியதாகவும் இதற்கான முடிவு நேற்றைய கூட்டத்தில் வெட்டப்படவில்லை. எனினும் இது தொடர்பில் மேலும் கவனம் செலுத்தி தங்களது பிரச்சனைக்குரிய தீர்வைப் பெற்று தருவதற்கு இந்த அரசாங்கம் முன் வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

# பற்சிகிச்சை உபகரணங்கள் மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

அரச வைத்தியசாலைகளில் பற்சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக அரச பற்சிகிச்சை நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல் நிரப்புதல், பல் பாதுகாப்பு உள்ளிட்ட சிகிச்சைகளுக்குத் தேவையான மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக அந்த சங்கத்தின் செயலாளர் வைத்திய நிபுணர் மஞ்சுளா ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருப்போர் பட்டியலில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## யாழ்.பல்கலை கலைப்பீடாதிபதியாக பேராசிரியர் சி.ரகுராம் தெரிவானார்!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப் பீடத்தின் புதிய பீடாதிபதியாக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரை யாளருமான பேராசிரியர் சி. ரகுராம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் மூன்று வருட காலத்துக்குச் செயற்படும் வகையில் இவர் பீடாதிபதியப் பணியாற்றவுள்ளார்.

# தமிழகத்தில் கரைஒதுங்கிய மிதப்பையினால் பதற்றம்!



(ந.லோகதயாளன்)

தமிழகத்தின் தங்கச்சி மடம் பகுதியில் படகை ஒத்த வடிவம் ஒன்று கரை ஒதுங்கியதனால் பதற்றம் நிலவுகின்றது.

இலங்கையின் சிங்கள எழுத்தை ஒத்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட வீட்டு வடிவத்தை ஒத்த மிதப்பையே இவ்வாறு கரை ஒதுங்கியுள்ளது.

இந்த மிதப்பை அலையில் அடித்து வரப்பட்டதா அல்லதா அல்லது வேறு நாடுகளில் இருந்து எவரும் ஊடுருவினரா என்ற விசாரணைகள் முடக்கி விடப்பட்டுள்ளன.

# சீனாவில் இரசாயன ஆலையில் ஏற்பட்ட பாரிய வெடிவிபத்தில் 5 பேர் உயிரிழப்பு

## எண்மரைக் காணவில்லை





பீஜிங், ஜன.18

சீனாவின் கிழக்கு லியோனிங் மாகாணம் பான்ஜின் நகரில் இரசாயனங்களை உற்பத்தி செய்யும் ஆலை ஒன்று உள்ளது. இந்த ஆலையில் நேற்று முன்தினம் தொழிலாளர்கள் வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் இரசாயன ஆலையில் பயங்கர வெடிவிபத்து நேரிட்டது. இதில் வானுயரத்துக்கு தீப்பிழம்பு எழுந்தது. அந்த பகுதி முழுவதும் கரும்புகை மண்டலம் சூழ்ந்தது.

மேலும் வெடிவிபத்தை தொடர்ந்து ஆலையின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததுடன், இதில் அங்கு பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் பலர் இடிபாடுகளில் சிக்கினர். இந்த விபத்து குறித்த தகவல் அறிந்ததும் தீயணைப்பு வீரர்கள் உடனடியாக அங்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக இறங்கினர்.

நீண்ட நேரம் போராடி தீயை அணைத்ததுடன், பின்னர் அவர்கள் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இதில் 5 பேர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டனர். 34 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்தில் 8 பேர் இடிபாடுகளில் சிக்கி மாயமாகி உள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லைஎன்று தெரிவிக்கப்படுவதுடன், அவர்களைத் தேடும்பணியில்மீட்புகுழுவினர்முழுவீச்சில்ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

## கொங்கோ நாட்டில் தேவாலயத்தில் குண்டு வெடிப்பில் பத்துப் பேர் சாவு




கின்சா, ஜன.18

மத்திய ஆப்பிரிக்க நாடான கொங்கோவின் கிழக்கு பகுதியில் உகாண்டா எல்லையையொட்டி உள்ள காசிந்தி நகரிலுள்ள தேவாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்புப் பிரார்த்தனைக்காக ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் மனமுருகி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது தேவாலயத்துக்குள் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது.

இதில் அந்தப் பகுதியே அதிர்ந்ததுடன், குண்டு வெடிப்பில் சிக்கி 10 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் சுமார் 40 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும்

அதிகரிக்காலம் என அஞ்சப்படுகின்றது. இதனிடயே இந்தக் குண்டு வெடிப்புக்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

## நேபாள விமான விபத்தில் அனைவருமே உயிரிழப்பு!

### 70 உடல்கள் இதுவரை மீட்பு



காத்மண்டு, ஜன.17

நேபாள தலைநகர் காட்மாண்டுவில் இருந்து சுற்றுலா தலமான பொக்காராவுக்கு நேற்று முன் தினம் காலை 10.33 மணிக்கு 'எட்டி ஏர்லைன்ஸ்' விமானம் புறப்பட்டு சென்றது. அதில் 68 பயணிகள் மற்றும் 4 விமான ஊழியர்கள் என மொத்தம் 72 பேர் பயணம் செய்தனர். அந்த விமானம் காலை 11 மணிக்கு பொக்காரா விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றது.

தரை இறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு விமானத்தில் திடீரென்று தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டமையால் விமானம் விழுந்து நொறுங்கியது. விழுந்து நொறுங்கிய விமானம் திடீரென்று தீப்பிடித்து எரியத் தொடங்கியது. இதையடுத்து விமானம் நொறுங்கி விழுந்த இடத்தில் மீட்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. விமான விபத்தில் விமானத்தின் பாகங்கள் எரிந்து

ஆங்காங்கே சிதறி காணப்படுகின்றன. மேலும் அதில் பயணம் செய்த பயணிகளின் உடல்களும்கருகியபடிஆங்காங்கேகாணப்பட்டன.

இந்த விமான விபத்தில் 68 பேர் இறந்தனர் என முதலில் தகவல்கள் வெளியான நிலையில் பலி எண்ணிக்கை 72 ஆக உயர்ந்தது. விமானத்தில் இருந்த 68 பயணிகள், 4 ஊழியர்கள் என 72 பேருமே இறந்து விட்டனர் எனவும் யாரையும் உயிருடன் மீட்கவில்லை எனவும் அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. இறந்தவர்களின் உடல்களை மீட்கும் பணி நடைபெற்றது.

இதற்கிடையே இரவானதால் மீட்பு பணிகள் நிறுத்தப்பட்டன. நேற்று காலையில்மீண்டும் மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்றன. இதுவரை 68 பேரின் உடல்கள்மீட்கப்பட்டுள்ளன எனத் தகவல் வெளியாகியிருந்த நிலையில், மீதமுள்ளவர்களின்உடல்களை தேடும் பணி நடந்துவந்தது. இந்நிலையில், மேலும் இருவரின் உடல்கள்மீட்கப்பட்டு உள்ளன. விபத்துக்குள்ளான அந்த இடத்தில் இருந்து மொத்தம் 70உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என நேபாள காவல்துறை தெரிவித்துள்ளது. எஞ்சியஇருவரைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

## உக்ரைனில் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்தது!

கீவ், ஜன.18

உக்ரைனில் ரஷ்யப் படைகள் தொடர்ந்து உக்கிரமான தாக்குதலை நடத்திவருகின்ற நிலையில், டினிப்ரோ நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடத்தைக் குறிவைத்து ரஷ்யா நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் பல வாகனங்கள் தீப்பற்றி எரிந்தன. குடியிருப்புக் கட்டடம் இடிந்து விழுந்ததில் ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர். அங்கு மீட்பு பணி நடைபெறுகின்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 15 வயது சிறுமி உட்பட 21பேர் உயிரிழந்திருக்கின்றனர் என முதல்கட்ட தகவல் வெளியாகியிருந்தமையுடன், மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என்றும், நாற்பதுக்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என்றும் அவர்களைத் தேடும் பணி நடைபெறுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் அடுக்குமாடி குடியிருப்பில் பலவீடுகள்சேதமடைந்தன. நூற்றுக்கணக்கானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர் என அதிபர் மாளிகையின் மூத்த அதிகாரி கைரிலோ திமோஷென்கோ கூறியிருந்தார். இந்நிலையில், உக்ரைன் அடுக்குமாடி குடியிருப்பில் நடைபெற்ற ஏவுகணைதாக்குதலில்உயிரிழந்தோர்எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது. இதில் 75 பேர் காயமடைந்துள்ளனர் என்றும், மாயமான 35 பேரை தேடி வருகிறார்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியா தேடிவருகின்ற நபரை ஐ.நா. சர்வதேசப் பயங்கரவாதியாக அறிவிப்பு



இந்தியா, ஜன.17

பாகிஸ்தானின் அப்துல் ரஹ்மான் மக்கியை ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் சர்வதேசப் பயங்கரவாதியாக அறிவித்துள்ளது. இவர் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஹபீஸ் சயீத்தின் உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் பல்வேறு பிரகடனங்களையும் பரிசீலனையில் கொண்டு அப்துல் ரஹ்மான் மக்கியை சர்வதேச பயங்கரவாதியாக அறிவித்துள்ளதாகக் கூறியுள்ளது.

அப்துல் ரஹ்மான் மக்கியை ஏற்கெனவே இந்தியாவும், அமெரிக்காவும் தேடப்படும் பயங்கரவாதியாக அறிவித்துள்ளன. அப்துல் மக்கி பயங்கரவாத அமைப்புக்கு ஆள் சேர்ப்பது, நிதி திரட்டுவது, இளைஞர்கள் மத்தியில் உரையாற்றி அவர்களை மூளைச்சலவை செய்து தாக்குதலுக்கு தயாராக்குவது – குறிப்பாக இந்தியா மற் றும் ஜம்மு காஷ்மீரில் தாக்குதல் நடத்த இளைஞர்களைத் தூண்டுவது – போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறார்.

இந்தியாவில் 2011 நவம்பர் 26 இல் நடந்த மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ஹபீஸ் சயீத்தின் மைத்துனர் தான் இந்த அப்துல் மக்கி என்று தெரிவிக்கப்படுகிறது. லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்புக்குத் தேவையான அனைத்து நிதி ஆதாரங்களையும் திரட்டுவதில் இவர் முக்கியப் பங்கு செலுத்தி வருகிறார்.

2020 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் பயங்கரவாதத் தடுப்புக் குழு மக்கியை குற்றவாளி என அறிவித்து சிறைத்தண்டனை விதித்தது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் மக்கியை சர்வதேச பயங்கரவாதியை அறிவித்தாலும் கூட சீனா பல தருணங்களில் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களை சர்வதேச பயங்கரவாதிகளாக அறிவிக்க முட்டுக்கட்டை போட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் சீனா மக்கியை சர்வதேச பயங்கரவாதியாக அறிவிக்க முட்டுக்கட்டை போட்டது. இந்நிலையில் இப்போது மக்கியை ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் சர்வதேச பயங்கரவாதியாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருச்சி விமான நிலையத்திற்கு நேற்று வெடிகுண்டு அச்சுறுத்தல்

### பொலிஸார் தீவிர விசாரணை




திருச்சி, ஜன.17

திருச்சி விமான நிலையத்தில் இருந்து மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளுக்கு விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் உள்நாட்டு விமான சேவைகளாக சென்னை, ஐதராபாத், புதுடெல்லி, பெங்களூர் உள்ளிட்ட நகரங்களுக்கும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் நேற்று மதியம் சுமார் 1.45 மணிக்கு திருச்சி விமான நிலைய முனைய மேலாளர் அறைக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.

பணியில் இருந்த அலுவலர் தொலைபேசியை எடுத்து பேசியபோது, எதிர்முனையில் பேசிய நபர், திருச்சி விமான நிலையத்தில் வெடிகுண்டு வைத்திருப்பதாக தெரிவித்துவிட்டு உடனடியாக தொடர்பை துண்டித்துள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த அலுவலர், இது பற்றி உடனடியாக முனைய மேலாளருக்கு தகவல் தெரிவித்துள்ளார். இதையடுத்து அவர்கள் மத்திய தொழில் பாதுகாப்புப் படையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதைத்தொடர்ந்து திருச்சி விமான நிலையத்தின் அனைத்து பகுதிகளிலும் மோப்பநாய் மற்றும் வெடிகுண்டு தடுப்பு பிரிவு அதிகாரிகள் மூலம் சோதனை செய்யும் பணி தீவிரமாக நடைபெற்றது.

மேலும் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்தினர். மதியம் 2 மணியளவில் தொடங்கிய சோதனை மாலை 5 மணி வரை நடைபெற்றது. இந்த சோதனையின் முடிவில் அங்கு வெடிகுண்டு எதுவும் வைக்கப்படவில்லை என்பது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து தொலைபேசியில் மிரட்டல் விடுத்த நபர் குறித்து விமான நிலைய பொலிஸார் மற்றும் விமான நிலைய மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தத் தொலைபேசி அழைப்பு வெளிநாட்டு எண்ணில் இருந்தோ அல்லது இணையதளம் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தச் சம்பவத்தால் திருச்சி விமான நிலைய பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## பொங்கலை முன்னிட்டு சிறப்புச் சோதனை; மதுபோதையில் சென்ற 376பேர் சிக்கினர்!



சென்னை, ஜன.17

சென்னையில் வசிக்கும் பிற மாவட்டத்தினர் பொங்கல் பண்டிகையை கொண்டாடுவதற்குச் சொந்த ஊருக்கு சென்றுவிட்டதால் நகரின் முக்கிய சாலைகள் போக்குவரத்து நெரிசல் இன்றி காணப்பட்டதுடன், மேலும் பல வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

இந்த நிலையில், பொங்கல் பண்டிகை அன்று 190 இடங்களில் பொலிஸார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். இதில் 5 ஆயிரத்து 904 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இந்த சோதனையில் மது போதையில் வாகனம் ஓட்டிய 376 பேர் சிக்கினர். அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து வாகனங்களைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

'ஹெல்மெட்' அணியாமல் மோட்டார் சைக்கிளை ஓட்டி சென்றவர்கள், அதிவேகமாக வாகனத்தை சென்றவர்கள் என போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபட்ட 359 பேர் மீதும் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து அபராதம் வசூலித்தனர். சென்னையில் மேலும் 2 நாள்களுக்கு சிறப்பு வாகன சோதனை நடத்தப்படும் என்றும், போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போக்குவரத்து பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

## உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ச்ஜல்லிக்கட்டு இன்று தொடங்கியது

அலங்காநல்லூர், ஜன.17

ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையையொட்டி மதுரை மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு விழா விறுவிறுப்பாக நடைபெறும் நிலையில், பொங்கல் பண்டிகை அன்று அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது. பாலமேட்டில் நேற்று ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது. இந்த நிலையில், மதுரை மாவட்டம் உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு இன்று காலை 8 மணியளவில் ஆரம்பமாகியுள்ளது போட்டியை தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொடியைசைத்து தொடங்கிவைத்துள்ளார்.

ஜல்லிக்கட்டு போட்டியில் 1,000 காளைகளும், 300 வீரர்களும் களம் காணும் நிலையில், வெற்றி பெறும் காளைகளுக்கும், வீரர்களுக்கும் தங்கம், வெள்ளி நாணயங்கள், சில்வர் பாத்திரங்கள், சைக்கிள், கட்டில், பீரோ, மிக்ஸி, கிரைண்டர் உள்ளிட்ட ஏராளமான பரிசு பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

அதிக காளைகளை அடக்கும் சிறந்த வீரருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சார்பாக ஒரு காரும், சிறப்பாக விளையாடி முதல் பரிசு பெறும் காளையின் உரிமையாளருக்கு அமைச்சர் உதயநிதி சார்பில் ஒரு காரும் பரிசாக வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# அக்கரைப்பற்று நீதிமன்ற தீ வைப்பு சம்பவத்திற்கும் தனக்கும் தொடர்பில்லை என்கின்றார் இனியபாரதி

அக்கரைப்பற்று நீதிமன்ற தீ வைப்பு சம்பவத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதுடன் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு பொலிஸாருக்கு எந்த நேரத்திலும் ஒத்துழைக்கத் தாம் தயாராகவுள்ளார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான இனியபாரதி என்றழைக்கப்படும் குமாரசாமி புஷ்பகுமார் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது:-

அக்கரைப்பற்று நீதிமன்றத்திற்கு தீ வைக்க வேண்டிய தேவை எனக்கில்லை. நீதிமன்ற களஞ்சியத்திற்கு தீ வைக்கின்ற அளவிற்கு சின்ன ஆளும் நான் அல்லர். நாட்டின் சட்டம் என்ன சொல்கின்றதோ, நீதிமன்றத்திற்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபட்டால் சட்டம் என்ன கூறுகின்றது என்பதை நான் தெளிவாக அறிவேன்.2004 ஆண்டு நாங்கள் கண்ட கண்டவர்களின் கதைகளை கேட்டு செயற்பட்டகாலங்கள் போல் தற்போது செயற்பட நாம் தயார் இல்லை. ஏனெனில் நாங்கள் முதிர்ச்சியடைந்துள்ளோம்.

அதில் அரசியல் மற்றும் சட்ட நீதியாகவும் எமக்கு அனுபவம் உள்ளது. எனவே இவ்வாறான சம்பவத்துடன் பொய்யான பிரச்சாரங்கள் மூலம் என்னைத் தொடர்புபடுத்த வேண்டாம். உண்மை நிலையை அறிய வேண்டியவர்கள் எம்மைத் தொடர்பு கொண்டு மக்களுக்கு தெளிவு படுத்த முன்வர வேண்டும். அத்துடன் நான் இச்சம்பவம் இடம்பெற்ற பின்னர் தலைமறைவாகினேன் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அது உண்மைக்கு புறம்பானது. இச்சம்பவத்திற்கு பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளேன். – எனக் குறிப்பிட்டார்.



# வடக்கு,கிழக்கு எங்கும் மரம் தனித்தே நிற்கும்!

## சம்மாந்துறையில் மு.கா. அறிவிப்பு



முஸ்லிம்களின் எதிர்காலத்ததையும், இருப்பையும் தீர்மானிப்பதற்கான அரசியல் முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இக்காலகட்டத்தில் ஷ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனேகமான மாவட்டங்களில் தனித்து மரச்சின்னத்தில் களமிறங்கவுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஷ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எம்.ஐ.எம். மன்சூர் தெரிவித்தார்.

சம்மாந்துறை மத்தியகுழு உறுப்பினர்களுடன் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் சந்தித்து கலந்துரையாடும் நிகழ்வு சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டுத் தொகுதி மண்டபவத் தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து நின்று கைப்பற்ற வேண்டும்.

முஸ்லிம்களின் ஒரே குரல் முஸ்லிம் காங்கிரஸ் தான் என்பதை அரசாங்கத்துக்கும், சர்வதேசத்துக்கும் உரத்துக் கூற வேண்டும். அனைத்து பேதங்களையும் மறந்து இந்தத் தேர்தலில் முஸ்லிம்கள் ஷ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினை பலப்படுத்த வேண்டும் என்றார்.

இந்தத் தேர்தலிலே முஸ்லிம் சமூகத்துக்கு இருக்கின்ற சவால்கள், சதிகள், ஆபத்துக்களை சரிவர விளங்கிக் கொள்ளாமல் எவரும் பிழையான தீர்மானங்களை எடுக்க வேண்டாம். எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இம்முறை சம்மாந்துறை பிரதேச சபையின் ஆட்சியை ஷ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டும். அதற்கு சிறந்த நபர்களை வேட்பாளர்களாக களமிறக்கவுள்ளோம் எனவே, இத்தேர்தலில் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகளுக்கு அப்பால் சம்மாந்துறை மக்கள் ஐக் கியத்தைக் கடைபிடித்து பெருந்தலைவர் அஷ்ரப் உருவாக்கிய நமது தேசிய விடுதலை இயக்கமான முஸ்லிம் காங்கிரஸை வெற்றி பெறச் செய்ய வேண்டும். – என்றார்.

# தேர்தல் கடமைகளை முன்னெடுக்கும் அலுவலர்களுக்கு பயிற்ச்சி செயலமர்வு



தமக்கு வழங்கப்பட்ட தேர்தல் கடமைகளையும் பொறுப்புக்களையும் சரியாகவும் வினைத்திறனாகவும் நம்பிக்கையைப் பேணும் வகையிலும் மேற்கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான பி.எச்.என். ஜயவிக்ரம வேண்டிக் கொண்டார்.

2023 உள்ளூர் அதிகாரசபை தேர்தலில் திருகோணமலை மாவட் டத்தில் வேட்புமனுக்களை கையேற்கும் கடமைகளில் ஈடுபடுத் தப்படவுள்ள உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி மதியம் 12 மணி வரை வேட்புமனு கையேற்கும் காலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க வேட்பு மனு ஏற்கும் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு நேற்று நடைபெற்றபோதே மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வேட்பு மனு ஏற்கும் கடமைகள் தொடர்பான விடயங்கள் இதன்போது திருகோணமலை மாவட்ட உதவி தேர் தல் ஆணையாளர்(பதில் கடமை) ஆர்.சசீலன் அவர்களால் தெளிவுபடுத் தப்பட்டது.

# அறுபது மாணவர்களுக்கு சூரிய ஒளி மின் குமிழ்கள்

## மட்டு. றோட்டரிக் கழகம் வழங்கியது




மட்டக்களப்பு றோட்டரிக் கழகம் மட்டு. மேற்கு வலயத்தில் மிகவும் பின்தங்கிய, மின்சாரம் இல்லாத 60 மாணவர்களுக்கு சூரிய ஒளியில் இயங்கும் மின் குமிழ்களை வழங்கி வைத்தது.

மட்டக்களப்பு றோட்டரிக் கழக தலைவர் றோட்டரியன் பி.ரமணதாச தலைமையில் இந்த நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.

குறிஞ்சாக் கேணி பாவற்கொடிச் சேனை உள்ளிட்ட மூன்று கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே அவை வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வுகளில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனக சூரியம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மின் குமிழ்களை வழங்கி வைத்தார்.புதிதாக நியமனம் பெற்ற கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலாவுக்கு றோட்டரி கழகத் தலைவர் ரமணன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

# பாட்டாளிபுரம் மாணவர்களுக்கு ஐந்து சைக்கிள்கள் அன்பளிப்பு



திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் வலயக்கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாட்டாளிபுரம் பாமகள் தமிழ் வித்தியாலயத்தில் கல்விக் கற்று, க.பொ.த.உயர்தரத்தில் கற்பதற்காக, சேனையூர் , மூதூர் , இலங்கைத்துறை முகத்துவாரம் மற்றும் பள்ளிக்குடியிருப்பு போன்ற இடங்களுக்குச் சென்று வரும் ஐந்து மாணவர்களுக்குத் சைக் கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பாட்டாளிபுரம் பாமகள் தமிழ் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் விடுக்கப்பட்ட உதவிக் கோரிக்கைக்கு இணங்க சேனையூர் மத்திய கல்லூரியின் 21 ஆவது அணியினரால் செயற்படுத்தப்படும் நண்பர்கள் கல்வி நலன் புரி அமைப்பினால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.அதற்கமைய இதத அமைப்பின் பிரதிநிதியும் பொதுச் சுகாதாரப் பரி சோதகருமான கோபகன், பாடசாலையின் உப அதிபர் பா.ரஞ்சித் குமார் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு சைக்கிள்கள்களை வழங்கி வைத்தனர்.

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தில் இரண்டு பேர் இன்று முழுத்தீவுக்குமான சமாதான நீதிவானாக பிரமாணம்!




சுன்னாகம்லயன்ஸ்கழகத்தின் இரண்டுஉறுப்பினர்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) மேல்நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் அகில இலங்கை முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டனர்.

இவர்களில் சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் சி.ஹரிகரன் வலி.வடக்கு பிரதேசசபையின் 2011, 2018 ஆகிய உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றிபெற்ற ஓர் உறுப்பினர் ஆவார். இவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம், தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் செயலாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதி உப தலைவரும், தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக்குழுவின் உறுப்பினரும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழையமாணவர் தாய்ச் சங்கத்தின் முன்னாள் செயலாளரும் விழிப்புலன் வலிவிழந்தோர் இல்லமாகிய வாழ்வகத்தின் பொதுச்சபை உறுப்பினருமாவார். சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் உறுப்பினராகப் பல்வேறு சமூகப் பணிகளிலும் வெஸ்கோ ஆங்கிலக்கல்லூரியின் நிர்வாக இயக்குநராகவும் மனித உரிமைகள் செயற்பாட்டு உறுப்பினராகவும் சேவையாற்றுகின்ற உதயகுமார் சிசில் றெமின்டஸ்;ம் இன்று அகிலஇலங்கை சமாதான நீரிவானான மேல்நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமானம் செய்துகொண்டார்.

# விடத்தல் தீவில் வரவேற்பு வளைவு திறந்து வைப்பு!



சமூகங்களின் ஒற்றுமைக்கு உதாரணமாக திகழும் விடத்தல் தீவு கிராமத்துக்கான வரலாற்று வரவேற்பு வளைவு ஞாயிற்றுக் கிழமை மாலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் – யாழ்ப்பாணம் பிரதான வீதி விடத்தல் தீவு கிராமத் துக்குச் செல்லும் பிரதான நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள விடத்தல் தீவு கிராமத்துக்கான உள் நுழைவு வரவேற்பு வளைவு இவ்வாறு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விடத்தல்தீவு கிராமத்தின் தனித்துவமான சிறப்புகளை மெரு கேற்றும் வகையில் புலம்பெயர்ந்த மற்றும் புலத்திலுள்ள விடத்தல் தீவு மண்ணின் மைந்தர்களின் நிதிப்பங்களிப்பினூடாகவும், விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் நெறிப்படுத்தலின் ஊடாகவும் பிரமாண்ட வரவேற்பு வளைவு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விழாவில் முதன்மை விருந்தினராக பொறியியலாள ரும் மன்னார் தொழில்நுட்ப கல்லூரியின் விரிவுரையாளரான சூசைப்பிள்ளை விமலேஸ்வரன் கலந்துகொண்டார்.

விடத்தல் தீவின் பெருமைகளைப் பொதுவெளியில் வெளிப்படுத் தும் திறப்பு விழாவில் மதத் தலைவர்கள் உள்ளிட்ட பிரதானிகள் கலந்துகொண்டனர். ஒன்றாக எழுந்து நின்று ஒற்றுமைக்கு பலம் சேர்க்கும் விடத்தில் தீவின் மானிடம் மாண்புறும் வகையில் இந்த வைபவம் அமைகிறது. இந்தக் கிராமத்துக்கு வந்தோரையும் ,வருவோரையும் வரவேற்கும் இந்த வரவேற்பு வளைவு எதிர் காலத்துக்கு வழிகாட்டும் வகையில் அமைவதையே இங்குள் ளோர் எதிர்பார்க்கின்றனர்.

# தமிழ் கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லை என்று கடும் காட்டம் சுயேச்சை வேட்பாளரை களமிறக்கும் தலைமன்னார் மக்கள்

## கட்டுப்பணத்தையும் செலுத்தினர்




உள்ளூஜுட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், தமிழ்த்தேசியக் கட்சிகள் தங்களது வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக இம்முறை இலங்கைத் தமிழரசு வடக்கு, கிழக்கில் தனித்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது. இதன்காரணமாக கூட்டமைப்பின் ஏனைய பங்காளி கட்சிகள் ஒன்றிணைந்து புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கி தேர்தலில் போட்டியிடவுள்ளன.

இந்தநிலையில், கட்சிகளுக்குள் ஒன்றுமையில்லாத நிலையில், இனியும் அவர்களை நம்பி பயன் இல்லை என்ற காரணத்தால் மன்னார் மாவட்டத்தில் உள்ள தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அதிரடியாக முக்கிய தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளனர். இதற்கமைய தங்களது ஊர் மக்கள் சார்பாக சுயேச்சை வேட்பாளர் ஒருவரை களமிக்கத் தலைமன்னார் மேற் கைச் சேர்ந்த ஊர் மக்கள் தீர்மானித்துள்ளனர்.

இனியும், அரசியல் கட்சிகளை நம்பி எந்த பயனும் இல்லை என்ற காரணத்தாலேயே தற்போது இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த ஒருவர்; தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இம்முறையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்திருந்த நிலையிலேயே, சுயேச்சை வேட்பாளர் ஒருவரை களமிறக்க தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த ஊர் மக்கள் தீர்மானித்துள்ளனர். இவ்வாறான தீர்மானம் எட்டப்பட்டதன் பின்னரும், குறித்த நாடாளுமன்ற உறுப்பினர், தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த சிலரை தனியே சந்தித்து தங்களது கட்ச சார்பில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் களமிறங்குமாறு கோரியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எடுத்த தீர்மானத்தை மீற முடியாத தர்மசங்கமான நிலையை அவர்கள் வெளிப்படுத்தினர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் இந்தத் தகவல்களை இன்னும் உறுதிப்படுத்த முடியவில்லை.

இவை எல்லாம் இவ்வாறாக நடந்துகொண்டிருக்கின்ற பின்னணியில் தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த ஊர் மக்கள் சார்பில் நேற்று (திங்கட்கிழமை) சுயேச்சையாக களமிறங்குவதற்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.